ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1901/3 - 2015 පෙබරවාරි මස 10 වැනි අඟහරුවාදා - 2015.02.10

*1901/3 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சுங்க அறிவித்தல்

சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235)

**2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சுங்கச் (திருத்த) சட்டத்தின் "உ" அட்டவணையின் 10 ஆம் உறுப்புரையின் கீழான கட்டளை**

2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சுங்கச் (திருத்த) சட்டத்தின் "உ" அட்டவணையின் 10 ஆம் உறுப்புரையின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் பொருள் இயைபு முறைக்குறியீட்டு தலைப்பு இலக்கங்கள் 87.01, 87.02, 87.03, 87.04, 87.05 மற்றும் 87.11 ஆகியவற்றின் கீழ் குறிப்பிடப்படும் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் பெறுமதிக் (விலை) கணிப்பீடானது 2015.02.10 ஆந் திகதியிலிருந்து பயன் வலுப்பெறும் வகையில் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்படுவதனைப் போன்று பிரயோகிக்கப்படல் வேண்டும் எனப் பிரகடனப்படுத்துகின்றேன்.

**மோட்டார் வாகனங்களுக்கான பெறுமதி (விலை) கணிப்பீடு செய்தல்**

87.01, 87.02, 87.03, 87.04, 87.05 மற்றும் 87.11 இயைபு முறைக் குறியீட்டு தலைப்புகளின் கீழ்வரும் புதிய மோட்டார் வாகனத்தின் சுங்கப் பெறுமதி (விலை) பின்வருவனவற்றின் 1, 2, 3, 4 மற்றும் 5 இன் கூட்டுத் தொகையாக இருத்தல் வேண்டும்.

(1) கீழே (i) இலும் (ii) இலும் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியில் ஆகக்கூடிய பெறுமதி –
 (i) அத்தகைய வாகன தயாரிப்பாளரினால் கொடுக்கப்படும் விலையின் அடிப்படையில் சுங்கப் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் தீர்மானிக்கப்படும் விலை;
 (ii) வாகனம் இலங்கைத் துறைமுகத்தை அடையும் வரை செலவிடப்பட்ட உண்மையான எவ். ஓ. பி. (FOB) பெறுமதி; இதற்கு உள்நாட்டில் செலவிடப்பட்ட சகல கட்டணங்களும் உள்ளடக்குதல் வேண்டும்.

(2) இலங்கைத் துறைமுகத்திற்கு எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவு.

(3) இலங்கைத் துறைமுகத்துக்கான காப்புறுதிச் செலவு.

(4) ஏற்றல், இறக்கல் மற்றும் கையாளுதலோடு இணைந்த இலங்கைத் துறைமுகத்திற்கு கொண்டு செல்வதற்கான செலவு.

(5) இலங்கைத் துறைமுகத்தினை வாகனம் அடையும் வரைக்கும் கொள்வனவாளரினால் செலுத்தப்பட்ட தரகு மற்றும் விற்பனைத் தரகு கட்டணம்.

2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சுங்கத் (திருத்தச்) சட்டத்தின் அட்டவணை "உ" இன் 10 ஆம் உறுப்புரையின் கீழ் வெளியிடப்பட்ட 2015, சனவரி மாதம் 29 ஆந் திகதிய 1899/35 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலானது இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு - 01,
2015, பெப்புருவரி 10.

2- 743



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.